# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 177/பேரூ/2023**
**நாள் : 20.09.2023**

திரு M. தர்மராஜ்,
சக்கம்பட்டி,
தேனி மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், சக்கம்பட்டி, காளியம்மன் கோவில் தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M. தர்மராஜ் என்பவரது 31.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.06.2023 அன்று பெறப்பட்டு, 177/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், சக்கம்பட்டி, காளியம்மன் கோவில் தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. தர்மராஜ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" மனுதாரர் ஆகிய நான், மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆண்டிபட்டி பேரூராட்சி, 12வது வார்டு சர்வே எண் 466/1 மற்றும் 466/1C–ல் 10 அடி பொதுப்பாதை தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற வேண்டி பேரூராட்சி

நிர்வாகத்திடம் பலமுறை மனு கொடுத்தும், வாய்மொழியாக பேசியும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தால், மேற்காணும் ஆக்கிரமிப்பை அகற்ற ஆவன செய்ய வேண்டியும் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றாத செயல் அலுவலர் மீது துறைவாரியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

**2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.**

3)ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.08.2023 நாளிட்ட அறிக்கையில் "தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, 12வது வார்டு, சக்கம்பட்டி, காளியம்மன் கோவில் தெருவில் புல எண் 466/1 மற்றும் 466/1Cல் உள்ள 10 அடி பொதுப் பாதையினை தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அந்த ஆக்கிரமிப்புகளை வருவாய் துறையினர் மூலம் அளவீடு செய்து அகற்றித்தரக் கோரி திரு. மு. தர்மராஜ் என்பரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பேரூராட்சி அலுவலக 14.7.2023 மற்றும் 31.07.2023 நாளிட்ட கடிதங்கள் மூலம் ஆண்டிபட்டி வட்டாட்சியருக்கு கடிதம் வைக்கப்பட்டது. ஆண்டிபட்டி வட்ட சார் ஆய்வாளர் மற்றும் பேரூராட்சி துறையினருடன் ஆண்டிபட்டி பிட்–1 கிராமம் புல எண். 466/1C பொதுப்பாதை, வருவாய் ஆவணங்களுடன் அளவீடு செய்யப்பட்டது. வட்ட சார் ஆய்வாளரின் அறிக்கையில் புல எண். 466/1C தற்போதைய வருவாய் அறிக்கையின்படி 1C1A1,1C1A2, 1C1B, 1C1C, 1C2 என உட்பிரிவு செய்யப்பட்டு தனிநபர்களின் பெயர்களின் பட்டா தாக்கலாகியுள்ளது. மனுதாரர் புகாராக தெரிவித்த இடத்தில் அரசு புறம்போக்கு பாதை என்ற வகைப்பாட்டில் எதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

**4) மனுதாரர் மற்றும் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரும் இம்முறைமன்ற நடுவத்தில் 03.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 03.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு.ஆ.தர்மராஜ் என்பவர்ஆஜராகவில்லை. பேரூராட்சியின் செயல் அலுவலர், இம்முறைமன்ற நடுவத்தில் 03.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

"தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சி 12வது வார்டு, சக்கம்பட்டி, காளியம்மன் கோவில் தெருவில் புல எண் 466/1 மற்றும் 466/1சி–ல் உள்ள 10 அடி பொதுப்பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி ஆண்டிபட்டி வட்ட சார் ஆய்வாளர் மற்றும் பேரூராட்சி துறையினருடன் ஆண்டிப்பட்டி பிட் – 1 புல எண் 466/1C வருவாய் ஆவணங்களுடன் அளவீடு செய்யப்பட்டது. சார் ஆய்வாளரின் அறிக்கையின்படி 1C1A1, 1C1A2, 1C1B, 1C1C மற்றும் 1C2 என

உட்பிரிவு செய்யப்பட்டு தனி நபர்களின் பெயர்களில் பட்டா தாக்கலாகியுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட சார் ஆய்வாளரின் அறிக்கைக்கு பதிலாக ஆண்டிபட்டி வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையும் மேலும் மேற்கண்ட புல எண்களின் அடங்கல் பதிவேட்டின் நகல் மற்றும் 'அ' பதிவேட்டின் ('A' Register) நகல்களையும் இன்னும் 1 வார காலத்தில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

தேனி மாவட்டம் சக்கம்பட்டியைச் சார்ந்த மனுதாரர் திரு. எம். தர்மராஜ் என்பவர் தனது 31.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட புல எண் 466/1 மற்றும் 466/1C-ல் உள்ள 10 அடி பொதுப்பாதையினை தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தினை ஆண்டிபட்டி வட்ட சார் ஆய்வாளரால் அளவீடு செய்யப்பட்டதில், புல எண் 466/1C ஆனது தற்போதைய வருவாய் கணக்கின்படி 1C1A1, 1C1A2, 1C1B, 1C1C மற்றும் 1C2 என உட்பிரிவு செய்யப்பட்டு தனிநபர்களின் பெயரில் பட்டா உள்ளது என்றும் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் இடம் பெறவில்லை என்பதும் வட்ட ஆய்வாளரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

7) இருப்பினும், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி சார் ஆய்வாளரின் அறிக்கைக்கு பதிலாக மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண்களின் 'அ' பதிவேடு மற்றும் 'அடங்கல்' ஆகியவற்றை பரிசீலித்து ஆண்டிபட்டி வட்டாட்சியரிடமிருந்து அறிக்கையினை 1 வார காலத்திற்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளபடி, ஆண்டிப்பட்டி வட்டாட்சியரின் 17.08.2023 நாளிட்ட அறிக்கையை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடமான புல எண் 466/1C தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு தனிநபர்களின் பேரிலேயே தாக்கலாகியுள்ள நிலையில் அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் இடம் பெறவில்லை என்கிற ஆண்டிப்பட்டி வட்ட சார் ஆய்வாளரின் அறிக்கையினை ஆண்டிபட்டி வட்டாட்சியர் உறுதி செய்துள்ளார் என்பது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

8) இந்நிலையில், மனுதாராின் புகார் மனு மீது எவ்வித முகாந்திரமும் இல்லாத நிலையில் ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M. தர்மராஜ்,
காளியம்மன் கோவில்,
சக்கம்பட்டி, ஆண்டிபட்டி வட்டம்,
தேனி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
ஆண்டிபட்டி,
தேனி மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

சென்னை–600 032

5/9/2023